

கோத்தகிரி கொணவக்கரை ஊராட்சிக்குட்பட்ட கொட்டகொம்பை சிவஹரி மஹாலில் நடந்து முடிந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன்,நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு, மாவட்ட அவைத் தலைவர் போஜன் மற்றும் கோத்தகிரி ஒன்றியச் செயலாளர் நெல்லை கண்ணன் ஆகியோர் பங்கேற்று, முகாமில் மொத்தமாக பெறப்பட்ட மனுக்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்தனர்.

### 25 ஆண்டு காலமாக நிறைவேற்றப்படாத

# நீலகிரி தொகுதி மக்களின் கோரிக்கை நிறைவேற்றம்!

## ஆ.இராசா எம்.பி.க்கு மக்கள் பாராட்டு – நன்றி!

உதகை, ஜூலை 21 - 25 ஆண்டு காலமாக நிறைவேறாத மக்களின் கோரிக்கையை நிறை வேற்றிய நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசாவுக்கு கிராம மக்கள் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்தனர்.

நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்ற தொகுதி மலை பகுதியான கேர்மாளம், தேவர்நத்தம் கிராமங்களுக்கு இன்று வரை தொலைத்தொடர்பு வசதி இல்லை .

எனவே தொலை தொடர்பு வசதி தேவை என்று மலைவாழ் மக்கள் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினரும், கழக துணை பொதுசெயலாளருமான ஆ.ராசாவிடம் கோரிக்கை வைத் தனர்.

கிராம மக்களின் கோரிக்கையை ஏற்ற ஆ.ராசா கிராமங்களுக்கு தொலை தொடர்பு சேவை வழங்க கோரி ஒன்றிய தகவல் தொடர்பு துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தார்.

கோரிக்கையை பரிசீலினை செய்த ஒன்றிய தொலைத் தொடர்பு அமைச்சர் அசுவினி வைஷ்ணவ் தொலைத்தொடர்பு வசதிக்கான கிராமங்களில் தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைப்பதற்கான ஆணையை வழங்கினார்.

இதனையறிந்த கேர்மாளம், தேவர்நத்தம் மலை வாழ் மக்களிடையே மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது

தங்களுக்கு தொலை தொடர்பு வசதி கிடைக்க ஏற்பாடு செய்த நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசாவிற்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துள்ளனர்.

# கலைஞரின் மூத்த புதல்வர் மு.க.முத்து மறைவு!

## பிரசிடெண்ட் அபூபக்கர் இரங்கல்!

சென்னை, ஜூலை 21 - மு.க.முத்து மறைவுக்கு இந்திய ஹஜ் அசோசியேசன் தலைவர் பிரசிடெண்ட் அபூபக்கர் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

முன்னாள் முதல மைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த புதல்வர் அண்ணன் மு.க.முத்து மறைவு செய்தி மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. 40 ஆண்டுகளுக்கு மேலாய் எங்கள் குடும்ப நண்பராக இருந்தவர். பல்வேறு கால கட்டங்களில் மனிதநேய மிக்க மனிதராக அவர் வாழ்ந்திருக்கிறார்.

அரசியலில் முகம் காட்டாவிட்டாலும் கூட நெருக்கமானவர்களுக்கு அகமும், முகமுமாய் இருந்து பழகியவர். அவரது மறைவு எனக்கு தனிப்பட்ட முறையில் மட்டுமல்லாது இஸ்லாமிய சமூகத்தினர் அனைவருக்கும் பேரிழப்பாகும். அவரது ஆன்மா அமைதியின் நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஒன்றியச் செயலாளர் ப.கோவிந்தராஜன் முன்னிலையில்

# கீழ்வேளூர் வடக்கு ஒன்றியத்தில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## கே.பழனியப்பன் – ஆர்.ஏ.டி. அண்ணாதுரை பங்கேற்பு!

நாகை, ஜூலை 21 - நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் எரவாஞ்சேரி ஊராட்சியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப. கோவிந்தராஜன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பழனியப்பன் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய பார்வையாளரும், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி அண்ணாதுரைமற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் முன்னிலையில் காருதாகுடி கிராமத்தில் நடைபெற்றது. அப்போது தி.மு.க.வில் இணைய விருப்பம் தெரிவித்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த காருதாக்குடி கிளை செயலாளர் இளஞ்செழியன் தலைமையில் எட்டு குடும்பங் களைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர் அக்கட்சியில் இருந்து விலகி கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளரும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராஜன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்தவர்களுக்கு இரு வண்ண கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே. பழனியப்பன், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, ஒன்றிய கழக நிர்வாகிகள் பாரதி மோகன், ஆர்.நடராஜன், சி.வீரமணி, தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் (சமூக வலைத்தளம், பாலு. ஆத்மநாதன், ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் கணேஷ்குமார், கிளை செயலாளர்கள் வைத்திய நாதன் பாலு, ஒன்றிய பிரதிநிதி சுரேஷ் ஒன்றிய தொண்டரணி துணை அமைப்பாளர் ராஜா மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகளுக்கு புதிய அடையாள அட்டையை கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், அரசு வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் எரவாஞ்சேரி ஊராட்சியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையின் போது தானாக முன்வந்து அ.தி.மு.க. கிளை செயலாளர் இளஞ்செழியன் தலைமையில் 8 குடும்பத்தினர் அக் கட்சியில் இருந்து விலகி கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ப. கோவிந்தராஜன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர் உடன் கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே. பழனியப்பன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, ஒன்றிய கழக நிர்வாகிகள் பாரதிமோகன், ஆர்.நடராஜன், சி.வீரமணி, தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் (சமூக வலைத்தளம்) பாலு.ஆத்மநாதன்,கிளை செயலாளர்கள் அ.வைத்தியநாதன், பாலு,பிரதிநிதி சுரேஷ் மற்றும் பலர் உள்ளனர்.



# தி.மு.க.
# இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எவரெஸ்ட் ந.நரேஷ்குமார் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 22.07.2025 | பெரணமல்லூர் மேற்கு ஒன்றியம் | அண்ணா சிலை அருகில், கொழப்பலூர். | போடி காமராஜ் த.கௌசல்யா |
| 2 | | சேத்துப்பட்டு பேரூர் | காமராஜர் சிலை அருகில், வந்தவாசி சாலை. | போடி காமராஜ் த.கௌசல்யா |
| 3 | | சேத்துப்பட்டு கிழக்கு ஒன்றியம் | கலைஞர் திடல், தும்பூர் கிராமம். | போடி காமராஜ் த.கௌசல்யா |
| 4 | | சேத்துப்பட்டு மேற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம், மண்டகொளத்தூர். | போடி காமராஜ் த.கௌசல்யா |
| 5 | | வெம்பாக்கம் மேற்கு ஒன்றியம் | சிறுவஞ்சிப்பட்டு கிராமம் | ஈரோடு இளையகோபால் தா.ஜெயபாரதி |
| 6 | | வெம்பாக்கம் மத்திய ஒன்றியம் | வெம்பாக்கம் கிராமம் | ஈரோடு இளையகோபால் தா.ஜெயபாரதி |
| 7 | 23.07.2025 | வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியம் | மாங்கால் | எஸ்.கே.ஸ்ரீராம் தா.ஜெயபாரதி |
| 8 | | அனக்காவூர் கிழக்கு ஒன்றியம் | தென்கல்பாக்கம் கிராமம் | எஸ்.கே.ராம் தா.ஜெயபாரதி |
| 9 | | போளூர் நகரம் | கோவிந்தசாமி தெரு, 3–வது வார்டு. | பவானி கண்ணன் த.கௌசல்யா |
| 10 | | போளூர் தெற்கு ஒன்றியம் | செங்குணம் கிராமம் | பவானி கண்ணன் த.கௌசல்யா |
| 11 | | போளூர் மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், சந்தவாசல். | பவானி கண்ணன் த.கௌசல்யா |
| 12 | | களம்பூர் பேரூர் | ஆஞ்சநேயர் கோயில் அருகில் | பவானி கண்ணன் த.கௌசல்யா |
| 13 | 24.07.2025 | ஆரணி நகரம் | கொசப்பாளையம் சுந்தரம் தெரு | பொன்னேரி சிவா வே.சிவசக்தி |
| 14 | | ஆரணி வடக்கு ஒன்றியம் | முள்ளண்டிரம் கிராமம் | பொன்னேரி சிவா வே.சிவசக்தி |
| 15 | | ஆரணி தெற்கு ஒன்றியம் | லாடவரம் கிராமம் | பொன்னேரி சிவா வே.சிவசக்தி |
| 16 | | வந்தவாசி மேற்கு ஒன்றியம் | சென்னாவரம் ஊராட்சி | பேரணாம்பட்டு ராஜேந்திரபிரசாத் வி.ஜாஸ்மின் சுவேதா |
| 17 | | வந்தவாசி மத்திய ஒன்றியம் | காரம் ஊராட்சி | பேரணாம்பட்டு ராஜேந்திரபிரசாத் வி.ஜாஸ்மின் சுவேதா |
| 18 | | வந்தவாசி கிழக்கு ஒன்றியம் | சீசமங்கலம் ஊராட்சி | பேரணாம்பட்டு ராஜேந்திரபிரசாத் வி.ஜாஸ்மின் சுவேதா |
| 19 | | அனக்காவூர் மேற்கு ஒன்றியம் | செய்யாற்றை வென்றான் | முரசொலி மூரத்தி லோ.ராதிகா |
| 20 | | செய்யார் கிழக்கு ஒன்றியம் | கீழ்புதுப்பாக்கம் கிராமம் | முரசொலி மூரத்தி லோ.ராதிகா |
| 21 | 25.07.2025 | செய்யார் மேற்கு ஒன்றியம் | தண்டரை கிராமம் | மங்கலம் பிரபாகரன் பா.ஸ்ரீலேகா |
| 22 | | செய்யார் நகரம் | அறிஞர் அண்ணா நகர், கொடநகர் | மங்கலம் பிரபாகரன் பா.ஸ்ரீலேகா |
| 23 | | பெரணமல்லூர் பேரூர் | பெரணமல்லூர் பேருந்து நிலையம் | லயோலா ராஜசேகர் வே.சிவசக்தி |
| 24 | | பெரணமல்லூர் கிழக்கு ஒன்றியம் | கிருஷ்ணாவரம் கூட்ரோடு | லயோலா ராஜசேகர் வே.சிவசக்தி |
| 25 | | தெள்ளார் மேற்கு ஒன்றியம் | மழையூர் கிராமம் | லயோலா ராஜசேகர் வே.சிவசக்தி |
| 26 | | வந்தவாசி நகரம் | புதுப் பேருந்து நிலையம் | லயோலா ராஜசேகர் வே.சிவசக்தி |
| 27 | | மேற்கு ஆரணி வடக்கு ஒன்றியம் | ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில், அத்திப்பட்டு. | குடியாத்தம் புவியரசி தா.ஜெயபாரதி |
| 28 | | மேற்கு ஆரணி தெற்கு ஒன்றியம் | விண்ணமங்கலம் ஊராட்சி நாடக மேடை | குடியாத்தம் புவியரசி தா.ஜெயபாரதி |
| 29 | | கண்ணமங்கலம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | குடியாத்தம் புவியரசி தா.ஜெயபாரதி |
| 30 | 26.07.2025 | தேசூர் பேரூர் | தேரடித் தெரு | ஆரணி மாலா லோ.ராதிகா |
| 31 | | தெள்ளார் மத்திய ஒன்றியம் | வெடால் கிராமம் | ஆரணி மாலா லோ.ராதிகா |
| 32 | | தெள்ளார் கிழக்கு ஒன்றியம் | கொடியலாம் கிராமம் | ஆரணி மாலா லோ.ராதிகா |

**திருவண்ணாமலை**

நாள் : 19.07.2025

கலைஞர் 100
1924 - 2023

